விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 206 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 29 திங்கட்கிழமை (13.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## இராணுவத்தினர் மீது அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறுகிறதாம்

### பதறுகிறார் சம்பிக்க ரணவக்க



(குருநாகல்)

விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்து, நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாத்த இராணுவ உயர் அதிகாரிகள் இன்று அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். தேசியத்தை முன்னி 15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் பேசும் ஆறு கட்சிகள் ஒருமித்துப் பயணிக்க முடிவு!

### அவர்களின் அறிவிப்பு இன்று வெளிவரும்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் சார்ந்து செயற்படும் ஆறு அரசியல் கட்சிகள் இன்று முதல் ஐக்கிய ஒப்பந்தமொன்றினூடாக ஒருமித்துப் பயணிக்கத் தீர்மானித்துள்ளன.

இதன் பிரகாரம் வடக்கு, கிழக்குத் தமிழர் அரசியல் சார்ந்து செயற்படும் இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 16ஆம் பக்கம் பார்க்க

## நவம்பர் 12இல் வருகிறது பட்ஜெட்

(கொழும்பு)

2027ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் 12ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் செப்ரெம்பர் 18 ஆம் திகதி வர்த்தமானியில் 15ஆம் பக்கம் பார்க்க

## டெங்கிலிருந்து மாணவர்களை பாதுகாக்கப் புதிய நடைமுறை

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நுளம்புக்கடியிலிருந்து பாதுகாப்பதற்காகப் பாடசாலை மாணவர்கள் சீருடைக்கு மேலதிகமாக கைகள் மற்றும் கால்களை மூடும் வகையிலான பொருத்தமான ஆடைகளை அணிந்து பாடசாலைக்கு வருவதற்கு 02ஆம் பக்கம் பார்க்க

யாழ்.நெடுந்தூர பஸ் நிலையத்தில் இணைந்த சேவை

## யாழ்.புகையிரத நிலையம் பல்வகை போ.வ.மையமாகும்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



(உரும்பிராய்)

யாழ்ப்பாண நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## உலகளாவிய வெப்பநிலை இலங்கைக்கு பேரபாயம்


### அனர்த்த நிலையப் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக, எதிர்காலத்தில் இலங்கை பெரும் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் அபாயமுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் (DMC) பணிப்பாளர் நாயகம், ஓய்வுபெற்ற மேஜர் 04ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு - கிழக்குக்கு சூரியன் கள விஜயம்

### எச்சரிக்கிறது வளிமண்டலவியல் திணைக்களம்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் ஆறு மாவட்டங்களுக்கு அதிக வெப்பநிலை 15ஆம் பக்கம் பார்க்க

## ஏறுமுகத்தில் டெங்கு நோயாளர் எண்ணிக்கை 68 ஆயிரத்தை தாண்டியது

(கொழும்பு)


இந்த வருடத்தில் இதுவரை பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 68 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இது வரை மொத்தம் 68,071 டெங்கு நோயாளர்கள் பதிவாகி 15ஆம் பக்கம் பார்க்க

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்

### நீதி அமைச்சர் ஹர்ஷன பதிலடி



(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் சம்பவத்துக்குப் பொறுப்பேற்பதாகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன். பொறுப்பேற்க முடியாது என்று ஒருபோதும் குறிப்பிடவில்லை. பொறுப்பில் இருந்தும் விலகவில்லை. எதிர்க்கட்சியினர் கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அன்னசத்திரம் நேற்று (12) சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இவ் அன்னசத்திரத்தில் ஒரே நேரத்தில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்க முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## டெங்கிலிருந்து...

வாய்ப்பளிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், பாடசாலை மாணவர்களிடையே பரவி வரும் டெங்குப் பரவலைக் குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களு வெவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கடவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, உரிய தரத்திலான நுளம்பு விரட்டிகளைப் பயன்படுத்துவது குறித்தும் தெளிவுபடுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் சக விரிவுரையாளர்

**திரு. சுந்தரநாதன் சுகுமார்**

BEd(Science), NDT, MED, DSM, PGDEM, SLTES - III

அவர்கள் 09.07.2026 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய கல்வி நிறுவக பட்டமளிப்பு விழாவில் கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PGDEM) பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று, உயர் பதவிகளைச் சிறப்புடன் அலங்கரிக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
முகாமையாளர், விரிவுரையாளர்கள்
ஆசிரிய வாண்மைவிருத்தி நிலையம்,
மானிப்பாய்.

(8033)


# விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)


கொழும்பு - கண்டி பிரதான வீதியில், பட்டலிய சந்திக்கு அருகில் இடம்பெற்ற கோர விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற தனியார் பயணிகள் பேருந்தை முந்திச் செல்ல மோட்டார் சைக்கிள் முற் பட்ட போது இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர்களை அப்பகுதி மக்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

மோட்டார் சைக்கிள் முதலில் பேருந்தின் மீது மோதியதாகவும் பின்னர் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லொறி ஒன்றின் மீதும் மோதி அதன் அடியில் சிக்கி விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ந-7)


# நீங்காத நினைவலைகளில் 17 ஆண்டுகள்...



## அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO Jaffna Post Office)

மலர்வு 18.07.1930 — உதிர்வு 22.06.2009

திதி : சதுர்த்தசி 13.07.2026 திங்கட்கிழமை

அப்பா உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக 13.07.2026 திங்கட்கிழமை (இன்று) கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் பர்வதவர்த்தினி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமிக்கு மோட்ச அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர், முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட மதிய உணவும் வழங்கப்படும்.

(2503)

தகவல் : குடும்பத்தினர் சார்பாக
மகன் நாகராஜா விஜயகுமார் (சங்கர்) – சுவிஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புற்றுநோய் பாதிப்புகள் இரு மடங்காக அதிகரிக்கும்!



## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**(ஜெனீவா) ------------------------------------**

**உலகளவில் புற்றுநோய் பாதிப்பு அபாயகரமாக அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.**

தற்போது ஆண்டுக்கு சுமார் 20.6 மில்லியனாக இருக்கும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை, 2050 ஆம் ஆண்டளவில் 35 மில் லியனாக உயரும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதய நோய்களுக்கு அடுத்த படியாக உலகில் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தும் நோயாகப் புற்றுநோய் உள்ளது.

மருத்துவத் துறையில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும், புற்றுநோயைத் தடுக்கும் முறைகளில், ஆரம்ப கால கண்டறிதல் மற்றும் அனைவருக்கும் சமமான சிகிச்சை கிடைப்பதில் இன்னும் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

புற்றுநோய் பாதிப்பைக் கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகள், ஆரம்பக்கால பரிசோதனைகள் மற்றும் தரமான சிகிச்சை முறைகளில் அதிக முதலீடு செய்ய வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தனிநபர்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மாற்றங்களும் இந்தச் சவாலை எதிர்கொள்ள அவசியமானது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி)

---

### தனிப்பட்ட வங்கிக் கணக்கை

# வேறு நபர்கள் பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம்!

### மத்திய வங்கி எச்சரிக்கை




(கொழும்பு)

பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட வங்கிக்கணக்கை வேறு நபர்கள் பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம் என மத்திய வங்கி பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில்,

ஒருவரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் நிகழும் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் அவரே பொறுப்பு.

சிலர் சிறிய மாதாந்திர கட்டணத்திற்கு தங்களது வங்கிக்கணக்கை வாடகைக்கு விட முன்வருகின்றனர்.

அவ்வாறு வாடகைக்கு விடப்பட்ட கணக்குகள் சட்ட விரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என்றும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே இவ்வாறான சூழல் ஏற்படுமாயின் மற்றவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு நீங்களும் சட்டரீதியாக பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்றும் வாடிக்கையாளர்களை எச்சரித்துள்ளது.

இது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு மத்திய வங்கி பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (நி)

---

### பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும்

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நிதியுதவி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் விசேட தேவையுடையோர் பிரிவின் கீழ் அனுமதி பெற்ற மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஆரம்பித்துள்ளது.

குறித்த திட்டத்தின் கீழ் 370 மாணவர்களுக்கு தலா 100,000 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.


இதன் முதற்கட்டமாக, நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற "சரஸவி திரியோ அபிமான் 2026" நிகழ்வில், 236 மாணவர்களுக்கு இதற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விசேட தேவை யுடையோர் என வகைப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே இந்த உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்கள் தங்களின் உயர்கல்வியைத் தடையின்றித் தொடர ஊக்குவிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி)

---


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. ஜெயராஜசிங்கம் நிலாஷன்

(அதிபர்- யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பா)

எமது பாடசாலையின் அதிபர் மதிப்பிற்குரிய திரு.ஜெயராஜசிங்கம் நிலாஷன் அவர்கள் கடந்த 09.07.2026 அன்று பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின்கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM ) பட்டத்தினைப் பெற்றுக் கொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெறவும் வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை.

(C-6035)

## சேவை நலன் பாராட்டு




திருமதி.ஜெயரத்தினம் லோகேஸ்வரி

ஆரம்பக் கல்வி ஆசிரியர் SLTS-I

சேவை விபரம்

- யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் 28.11.1989 - 01.02.1993
- யா/கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை 02.02.1993 - 31.12.1994
- யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் 01.01.1995 - 12.05.1998
- யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை 13.05.1998 - 11.06.2012
- யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் 12.06.2012 - 31.12.2019
- யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் 01.01.2020 - 12.07.2026

எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி 12.07.2026 நேற்றுடன் ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி ஜெயரத்தினம் லோகேஸ்வரி அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வாழ்த்தி நிற்கின்றோம்.


ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்.

(C-6031)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 5 ஆவது ரி-20 போட்டியிலும் இங்கிலாந்து வெற்றி; தரவரிசையில் முதலிடத்தை இழந்தது இந்தியா

**இங்கிலாந்து மற்றும் இந்திய அணிக ளுக்கிடையிலான 5ஆவது இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**




சவுத்தாம்டனில் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணியின் சார்பில் ஜோஸ் பட்லர் 131 ஓட்டங்களையும், ஹரி ப்ரூக் 95 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சிவம் துபே 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்த நிலையில் 258 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் சார்பில் இஷான் கிஷன் 56 ஓட்டங்களையும், திலக் வர்மா 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் சார்பில் சாம் கரண் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதற்கமைய ஒரு போட்டி மழையால் கைவிடப்பட்டதையடுத்து 5 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரை 4-0 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

குறித்த தொடரில் தோல்வியைத் தழுவியதன் மூலம், கடந்த 4 ஆண்டுகளாக ரி- 20 தரவரிசையில் முதலிடத்திலிருந்த இந்தியா, தற்போது அந்த இடத்தைப் பறிகொடுத்துள்ளது.

இதன்படி ரி- 20 தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்து அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. (3)

# உலக கிண்ண கால்பந்து;
## அரையிறுதிக்குள் நுழைந்த ஆர்ஜென்டினா

உலகக் கிண்ண கால்பந்து தொடரில் ஆர்ஜென்டினா அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

உலகக்கிண்ண கால்பந்து தொடரின் கால் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டினா மற்றும் சுவிட்சர்லாந்து அணிகள் மோதின.

இதில் முதல் பாதியில், மெஸ்ஸி அனுப்பிய பந்தை மேக் ஆலிஸ்டர் கோலாக மாற்றி, ஆர்ஜென்டினா அணிக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார். இதன் பிறகு முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க முடியவில்லை.

இரண்டாவது பாதியில் சுவிட்சர்லாந்து அணி ஒரு கோல் அடித்து சமன் செய்தது. இதன் பிறகு இரு அணிகளும் கோல் அடிக்க முடியாததால் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும்1-1 என்ற சமநிலையில் இருந்தன. இதனையடுத்து கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டது.

அப்போதும் கோல் அடிப்பது இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக ,ருந்தது . கூடுதல் நேரம் தொட ங்கிய 20ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினா வீரர் ஜூலியன் அல்வரெஸ் 2ஆவது கோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

சிறிது நேரத்தில் தியாகோ அல்மடா 3 ஆவது கோல் அடித்து ஆர்ஜென்டினா அணியின் வெற்றியை உறுதி செய்தார். ஆட்ட நேர முடிவில் ஆர்ஜென்டினா அணி 3-1 என்ற கோல்க்கணக்கில் சுவிட்சர்லாந்தை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. அரையிறுதியில், இங்கிலாந்து அணியை சந்திக்க உள்ளது. (3)

## யாழ்.புகையிரத...

யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் புனரமைக்கப்பட்ட வீதியினை நேற்று மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வினைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தின் 'நெடுந்தூர பேருந்து நிலையத்தை இயங்கச் செய்வதில் சில சிக்கல்கள் காணப்படுவதனால், அதனை முறையாகப் பயன்படுத்த முடியாது உள்ளது.

எனினும், தற்போது நீதிமன்ற உத்தரவொன்று கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில், அனைத்து வகையான பேருந்து சேவைகளையும் அங்கிருந்து தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனால், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகளுக்கு இடையே ஒருங்கிணைந்த நேர அட்டவணையை உருவாக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தை ஒரு 'பல்வகை போக்குவரத்து மையமாக' அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

இதன் மூலம் புகையிரதம், பேருந்து மற்றும் முச்சக்கர வண்டி உள்ளிட்ட வாடகை வாகன சேவைகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்க முடியும்.

நகர அபிவிருத்தி என்ற ரீதியில், யாழ்ப்பாண நகரத்தை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி யாழ்ப்பாணத்தை ஒரு முக்கிய நகரமாக அடையாளம் கண்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, யாழ் மாநகர சபை மற்றும் வடமாகாண சபை ஆகியன இதற்குத் தேவையான முதற்கட்ட உடன்பாடுகளை எங்களுக்கு வழங்கினால், அதற்கு ஏற்ப யாழ்ப்பாண பேருந்து நிலையம் மற்றும் அந்தப் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க முடியும்.

ஜனாதிபதி அவர்களின் வாழ்வதற்கு கந்த நகரங்கள் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள 10 முக்கிய நகரங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடங்கியுள்ளது எனத் தெரிவித்தார்.(ந-7,33)

## உலகளாவிய...

ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட எச்சரித்துள்ளார்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவில் (COPE) முன்னிலையான போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் நாட்டின் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பிலுள்ள பாரிய குறைபாடுகளையும் ஆபத்துகளையும் பகிரங்கமாக வெளிப்படுத்தினார்.

நாடு எதிர்கொள்ளும் மிகப் பெரிய ஆபத்து ஒன்றை சுட்டிக்காட்டிய அவர்,

"அந்தமான் தீவுப் பகுதியில் ஏதேனும் நிலநடுக்கம் ஏற்பட்டு சுனாமி உருவானால், வெறும் 40 நிமிடங்களுக்குள் சுனாமி அலைகள் இலங்கையின் கரையோரங்களை வந்தடையும். இவ்வளவு குறுகிய காலப்பகுதிக்குள் கரையோரப் பகுதிகளில் வாழும் 3.8 மில்லியன் (38 இலட்சம்) மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது தற்போதைய சூழ்நிலையில் மிகவும் கடினமான காரியம்" எனக் குறிப்பிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

அத்துடன், தற்போது நாட்டிலுள்ள சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் செயலிழந்துள்ளதாகவும், அவற்றைச் சரிசெய்வதற்கான முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இயலாமைகள் குறித்து அவர் மேலும் விளக்குகையில்

அண்மையில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளி போன்ற அனர்த்தங்களின் போது, அதனை எதிர்கொள்வதற்குத் தேவையான பணியாளர் திறன் எம்மிடம் இல்லை. 24 மணிநேரமும் இயங்கும் அவசரகால நடவடிக்கைப் பிரிவின் அதிகாரிகளுக்கு இரவு நேரப் பணிக்கான அடிப்படைத் தங்குமிட வசதிகள் கூட இல்லை.

மாவட்ட ரீதியான அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுகள் மாலை 4.30 மணிக்கே மூடப்படுகின்றன. இதனால், இரவு நேரங்களில் அனர்த்தங்கள் ஏற்படும் போது, தொலைதூரத்திலுள்ள அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு அதிக நேரம் செலவாகிறது.

பணியாளர் பற்றாக்குறையைப் போக்கும் நோக்கில், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தையும் (DMC) தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தையும் (NDRSC) இணைக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். எனினும், அந்தச் செயல்முறைக்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால், இடைப்பட்ட காலத்தில் ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால் நாடு கடுமையான நெருக்கடியைச் சந்திக்கும்.

உலக நாடுகள் அனைத்தும் நவீன தொழில்நுட்பத்தையும் வளங்களையும் பயன்படுத்தி தங்களது அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தி வரும் வேளையில், இலங்கையில் இந்தச் செயல்முறை மிகவும் மெதுவாகவே முன்னேறி வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட கவலை வெளியிட்டுள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி அமைச்சருக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அதன்படி, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார பதவியிலிருந்து நீக்கப்படாமல் இந்தச் சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணை யொன்றை முன்னெடுக்க முடியாது என நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நீதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர தீர்மானித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலைக் குறைப்பதற்காக புதிய சிறைச்சாலைகளை அமைப்பதை விடுத்து, கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் மாற்றுச் சட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன், வரலாற்றுச் சிறப்புமிக்க போகம்பறை சிறைச்சாலை வளாகத்தை மீண்டும் சிறைச்சாலையாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார விமர்சித்துள்ளார். (நி)

# போதைப் பொருளுடன் பெண் கைது



(வத்தளை)

வத்தளைப் பகுதியில் ஒரு கிலோ கிராமிற்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பெண்ணிடம் இருந்து ஒரு கிலோ 140 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 538 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (நி)

# INVITATION FOR BID 2026/06

## VALIKAMAM NORTH PRADESHIYA SABHA,KANKESANTHURAI (Kollankaladdy)

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **Above 5Mn work "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the Public Contract Act No 03. of 1987."**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Bidding document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2026.07.13 to 2026.07.27** in between 09:00 hrs. and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) T.P:021 224 1130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2026.07.13 to 2026.07.27 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) on or before 10.30 a.m. at 2026.07.28** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy).** commencing at **10.30 AM on 2026.07.20**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2026-07-13 To 2026-07-27 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | 2026-07-20 at 10.30 AM | | | | |
| | Closing and Opening of Bids | | | 2026-07-28 at 10.30 AM | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(14)/05/02/560/PSDG/Dit-02/2026 | Reconstruction of Mahathma Road at Alaveddy (Asphalt) | 9.49 | 105 | C8,C7 and C6 (Highway) | 3,000.00 | 95,000.00 | 10.11.2026 | 13.10.2026 |
| NP/14/41(14)/05/02/561/PSDG/Dit-03/2026 | Reconstruction of Koovil Karukampanai Road at Keerimalai (Asphalt) | 4.68 | 98 | C8,C7 and C6 (Highway) | 3,000.00 | 47,000.00 | 13.10.2026 | 15.09.2026 |
| NP/14/41(14)/05/01/562/CF-25/2026 | Reconstruction of Arasady Ponnippulam 1st Right Side Road at Alaveddy | 2.42 | 60 | C9,C8 and C7 (Highway) | 3,000.00 | 25,000.00 | 13.10.2026 | 15.09.2026 |
| NP/14/41(14)/05/01/563/CF-26/2026 | Reconstruction of 8th Mile Post 4th Left Lane off Left Side Roads at Mallakam | 5.98 | 90 | C8,C7 and C6 (Highway) | 3,000.00 | 60,000.00 | 10.11.2026 | 13.10.2026 |
| NP/14/41(14)/05/01/564/CF-27/2026 | Reconstruction of Kaali Kovil Road at Tellippalai | 4.75 | 90 | C8,C7 and C6 (Highway) | 3,000.00 | 48,000.00 | 13.10.2026 | 15.09.2026 |
| NP/14/41(14)/05/01/565/CF-28/2026 | Reconstruction of Viththakapuram Navakkiri Internal Roads | 5.96 | 90 | C8,C7 and C6 (Highway) | 3,000.00 | 60,000.00 | 10.11.2026 | 13.10.2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kankesanthurai (Kollankaladdy).**
**13.07.2026**

(C-6026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கு ஆபத்து குரலற்றவர்களின் குரல் அமைப்பு எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை பார்க்கும்போது, நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாகியுள்ளதாக 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் தலைவர் கோமகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், சிறைச்சாலைகளில் கைதிகளும் மனிதர்களே என்ற வாசகம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும், அங்கு கைதிகள் மீது மிலேச்சத்தனமான கொடுமைகளே அரங்கேற்றப்படுகின்றன.

அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

கைதிகள் யாராகவும் இருக்கலாம். ஆனால் அவர்களின் பாதுகாப்பை அரசு உறுதிசெய்வது அவசியம்.

இந்தச் சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தற்போது சிறைச் சாலைகளில் நிலவும் இவ்வாறான வன்முறைச் சூழலை நோக்கும் போது, நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் திட்டமிட்ட தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக தாம் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் , அவர்களது பாதுகாப்பு தற்போது பெரும் கேள்விக் குறியாகியுள்ளது என சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான சூழலில் சிறைச்சாலைகளுக்குள் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அதிகாரிகள் காட்டும் மெத்தனப் போக்கை யும், அங்கு இடம்பெறும் மனித உரிமை மீறல்களையும் அவர் இதன் போது கடுமையாகச் சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# காணிகளை விடுவிக்கக்கோரி நான்காவது தடவையாகவும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக்கோரி பலாலி சந்தியில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நான்காவது வாரமாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 36 வருடங்களாக காணிகளை இழந்த மக்கள் இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

தமது காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வரும் நிலையில் தாம் நீண்ட காலமாக நிலங்கள், வீடுகள் அற்று வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டனர்.

போராட்ட இடத்தில் கொட்டகை அமைத்து போராட்டத்தை முன்னெடுக்க மக்கள் முயற்சித்த போதும் பொலிஸார் அதனை தடுத்து நிறுத்திய நிலையில், மக்கள் கொளுத்தும் வெயிலில் தொடர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். (8-33)


# ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான சுற்றாடல் செயற்பாட்டு பட்டறை



(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை (9) ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான வலய மட்ட சுற்றாடல் சார் செயற்பாட்டுப் பட்டறை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் வரணி பிரதேசத்தை சேர்ந்த 7 பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்றி பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)



தென்மராட்சி வரணிப் பிரதேச தரம்-5 மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (படம்-சுபேசன்)




யாழ் சமூக செயற்பாட்டு மையம் (JSAC) ஏற்பாடு செய்த பெண் அரசியற் செயற்பாட்டாளர்களுக்கான செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பப் பயிற்சி செயலமர்வு கடந்த வெள்ளிக் கிழமை(10) நடைபெற்றது. முப்பதிற்கும் மேற்பட்ட பெண் அரசியற்செயற்பாட்டாளர்கள் இப்பயிற்சி செயலமர்வில் பங்கேற்றனர். இப்பயிற்சியானது Curveup நிறு வனத்தின் அனுபவமிக்க வளவாளர்களால் நடத்தப்பட்டது.

## ஓமந்தை மத்திய கல்லூரியின்

# புதிய வகுப்பறை கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



(வவுனியா)

வடக்கு மாகாண பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் புதிய மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் ஆகியோரின் தலைமையில் இவ்வேலைத்திட்டம் நடைபெற்றது.

மாகாண திறைசேரி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 40 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இம்மாடிக் கட்டிடத்திற்காக முதற்கட்டமாக 27 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டு வருட காலப்பகுதிக்குள் இதன் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 300 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 900 | 1200 |
| தக்காளி | 500 | 500 | 350 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 200 |
| கோவா | 200 | 300 | 300 | 250 |
| கரட் | 360 | 400 | 380 | 400 |
| பூசணி | 240 | 200 | 150 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 140 | 250 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 900 | 800 | 700 | 800 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 400 | 300 | 400 | 400 |
| பயற்றங்காய் | 350 | 500 | 400 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 450 | 500 | 400 | 400 |
| கறிமிளகாய் | 500 | 400 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 300 | 400 |
| போஞ்சி | 450 | 500 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 80 | 80 |
| தேசிக்காய் | 300 | 400 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 110 | 100-140 |
| இராசவள்ளி | 450 | 400 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 350 | 500 |
| முள்ளங்கி | 200 | 200 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 70 | 150 | -- | 60 |
| வல்லாரை | 70 | 100 | -- | 120 |
| ஈரப்பலா | -- | 100 | -- | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெல் கொள்முதல் இன்று ஆரம்பம்

(கொழும்பு)


இந்த ஆண்டின் பெரும்போக அறுவடைக்கான நெல் கொள்முதல் இன்று முதல் ஆரம்பிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் வாரியம் தெரிவித்துள்ளது.

பல பகுதிகளில் பெரும்போக நெல் அறுவடை ஏற்கனவே தொடங்கிவிட்டதால், அதிக அறுவடை உள்ள பகுதிகளை அடையாளப்படுத்தி நெல் களஞ்சிய சாலைகள் திறக்கப்படும் என வாரியத்தின் தலைவர் மஞ்சுளா பின்னலந்த தெரிவித்தார்.

அதன்படி, நாடு முழுவதும் 143 இடங்களில் அமைந்துள்ள களஞ்சியசாலைகளில் இருந்து நெல் கொள்முதல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மரண அறிவித்தல்

மலர்வு 18 - 08 - 1935



உதிர்வு 11 - 07 - 2026

## கந்தர் சின்னையா

(ஓய்வு நிலை கிராம சேவகர்)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கொயிலாமனை கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சின்னையா அவர்கள் கடந்த 11.07.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராசாத்தியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன் (ஜேர்மனி), விக்னராசா (லண்டன்), கலைவாணி (ஆசிரியை-யா/சுன்னாகம் றோ.க.த.பா), கலையரசி (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற விக்கினதாஸன் அவர்களின் பாசமிகு தந்தையும், கமலாவதி (ஜேர்மனி), உதயகுமாரன், விநோதன் (பிரான்ஸ்), மற்றும் காலஞ்சென்ற சுபதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், சின்னத்தம்பி, சுப்பிரமணியம், ஆறுமுகம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திசாந், திலக்ஷன், வைஸ்ணவன், சௌமியன், கதீஸ்சன், நிதர்சன், தர்சிகள், மதுசன், சுஜீதா, பேரிசன் ஆகியோரின் பாமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 14.07.2026 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கட்டைபறித்தான் கொயிலாமனை கொடிகாமம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொயிலாமனை,
கொடிகாமம்.

தகவல் : குடும்பத்தினர்
T.P - 076 488 5485

(C-6025)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




01.03.2024 இல் கல்விமாணிப் பட்டத்தை நிறைவு செய்து 07.07.2026 BMICH Colombo இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியை

திருமதி
**பாரதி சத்தியேந்திரா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:அதிபர், ஆசிரியர்கள்
கல்வி சாரா ஊழியர்கள், நலன்புரிச்சங்கத்தினர்
யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை

(2509)

# வலி கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்கம் (வ-து), நீர்வேலி

சகல வாடிக்கையாளர்களுக்கும்,

**மீதிகளினை உறுதிப்படுத்தல்**

மேற்படி சங்கத்தில் 01.06.2025 தொடக்கம் 31.05.2026 வரையான நிதியாண்டிற்குரிய கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் சங்கத்துடனான வருமதி, சென்மதிகள் மற்றும் அங்கத்தவர் சேமம், அங்கத்தவர் கடன் புத்தகங்களையும் சமர்ப்பித்து மீதிகளினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| இடம் | திகதி | நேரம் | முகவரி |
|---|---|---|---|
| உரும்பிராய் கிராமிய வங்கி | 16.07.2026<br>17.07.2026 | 9.00-2.00<br>9.00-2.00 | பலாலி வீதி,<br>உரும்பிராய் |
| கோப்பாய் கிராமிய வங்கி | 20.07.2026<br>21.07.2026 | 9.00-2.00<br>9.00-2.00 | மானிப்பாய் வீதி,<br>கோப்பாய் மத்தி |
| நீர்வேலி கிராமிய வங்கி | 28.07.2026<br>30.07.2026 | 9.00-2.00<br>9.00-2.00 | நீர்வேலி குறுக்கு வீதி,<br>நீர்வேலி வடக்கு |
| தலைமை அலுவலக மண்டபம் | 04.08.2026<br>05.08.2026 | 9.00-2.00<br>9.00-2.00 | பருத்தித்துறை வீதி,<br>நீர்வேலி தெற்கு |

**இ.வேல்குமார்**
**(கணக்காய்வாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)**
**மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.**
**13.07.2026**

(C-6018)

# சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

(யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை)

திருமதி.
**அன்புமலர் மகேந்திரன்**



எமது பாடசாலையில்
8 வருடங்கள் சேவையாற்றி
மொத்தம் 34 வருடங்கள்
ஆசிரியர் சேவையினை
சிறப்பாகப் பூர்த்தி செய்து
இன்று மணிவிழாக் காணும்
எமது ஆசானை மனதார
வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்**

- 1992.09.01-1994.12.31 - யா/பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க பாடசாலை
- 1995.01.01-2010.02.11 - யா/சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலை
- 2010.02.12-2018.07.02 - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
- 2018.07.03-2026.07.13 - யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை


பாடசாலைச் சமூகத்தினர்
யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை

(C-6028)

# மணிவிழா வாழ்த்துகள்

13.07.2026

## திருமதி அருட்செல்வி ஸ்ரீதரன்



**வாழ்த்துக் கவி**

இரக்கம் கொண்ட இதயத்தோடு
இன்முகம் காட்டும் ஆசானே
யாரையும் கடிந்திடாத அன்பு வடிவமே
வணங்குகிறோம் அருட்செல்வி ஆசானே!
அறிவை விதைத்து அன்பால் வளர்த்த
அரும் பெரும் ஆசிரியரே
உங்கள் பொறுமையும் புன்னகையும்
எங்கள் வழிகாட்டி
இம் மணிவிழா நாளில் நீவிர்
நூறாண்டு காலம் நீடூழி வாழ்க என
வாழ்த்துகின்றோம்

*13.07.2026 இன்று தனது சேவையை நிறைவு செய்து மணிவிழாவைக் கொண்டாடுகின்ற எமது பாடசாலையின் ஆசிரியரும் ஆரம்ப பிரிவின் வகுதித் தலைவருமான திருமதி அருட்செல்வி ஸ்ரீதரன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைவதோடு அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.*

**சேவை விபரம்**

- யா/சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை 01.09.1992-02.01.2000 (ஆசிரியர்)
- கிளி/திருவையாறு மகா வித்தியாலயம் 03.01.2000-09.01.2002 (ஆசிரியர்)
- கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம் 10.01.2002-31.04.2002 (ஆசிரியர்)
- கிளி/திருவையாறு மகா வித்தியாலயம் (01.05.2002-05.01.2016 (ஆசிரியர்)
- கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் 06.01.2016-13.07.2026 (வகுதித் தலைவர்)

(C-6030)

*வாழ்த்துவோர்:-* அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள். (ஆசிரியர்கள், ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்)
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# திடீரென கழன்ற விமானத்தின் ஜன்னல்

## நடுவானில் திக் திக் நிமிடங்கள்




(ஏதென்ஸ்)

கிரேக்கத்தின் தெசலோனிகி நகரில் இருந்து ஜேர்மனியின் மெமிங்கன் நகருக்குப் புறப்பட்ட ரையான்ஏர் நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் 737 விமானத்தில், நடுவானில் திடீரென ஜன்னல் கண்ணாடி உடைந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தின் போது ஜன்னல் அருகில் அமர்ந்திருந்த செர்பிய நாட்டைச் சேர்ந்த 60 வயது மதிக்கத்தக்க பயணி ஒருவர், காற்றின் கடுமையான அழுத்தத்தால் ஜன்னல் வழியாக வெளியே இழுக்கப் பட்டுள்ளார்.

அதிர்ஷ்டவசமாக அவர் சீட் பெல்ட் அணிந்திருந்ததால், அவரது தலை மற்றும் தோள்பட்டை வரை மட்டுமே ஜன்னலுக்கு வெளியே தொங்கியுள்ளது.

விமானத்திற்குள் இருந்த மற்ற பயணிகள் உடனடியாகச் செயற்பட்டு, சில நிமிட போராட்டத்திற்குப் பிறகு அவரை பத்திரமாக உள்ளே இழுத்து மீட்டுள்ளனர்.

இந்த விபத்தைத் தொடர்ந்து, விமானம் உடனடியாகத் தெசலோனிகி விமான நிலையத்திற்குத் திருப்பப்பட்டு பத்திரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.


பாதிக்கப்பட்ட பயணிக்குத் தரையிறங்கியவுடன் முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. இந்த 18 ஆண்டுகள் பழமையான விமானத்தை ரையான்ஏர் நிறுவனத்தின் துணை நிறுவனமான மல்டா ஏர் இயக்கியுள்ளது.

இந்த அபாயகரமான விபத்து குறித்து கிரீஸ் மற்றும் மல்டா நாட்டின் சிவில் விமான போக்குவரத்துத் துறையினர் தீவிர விசாரணையைத் தொடங்கியுள்ளனர். (3)

# அமெரிக்க தாக்குத

# ஹார்முஸ் நீ

# மூடியது




இந்த முடிவைத் தொடர்ந்து அமெரிக்கா எந்தவித இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபட்டால், கடுமையான பதிலடி வழங்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிராந்தியத்தில் உள்ள புதிய அமெரிக்கத் தளங்களும் இலக்காகக் கொள்ளப்படும் என ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவற்படை எச்சரித்துள்ளது.

மேலும், ஹார்முஸ் நீரிணையில் ஈரான் பரிந்துரைத்த கடற்பாதையைப் பின்பற்றாமல் சென்றதாகக் கூறப்படும் மற்றொரு வர்த்தகக் கப்பல் மீது, எச்சரிக்கை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவற்படை தெரிவித்துள்ளது.


இந்த வார தொடக்கத்தில், ஓமான் கடற்பரப்பை ஊடறுத்து அமெரிக்கா பரிந்துரைத்த பாதையில் பயணித்த மூன்று



## பங்களாதேஷில் கனமழை

# 44 பேர் உயிரிழப்பு

## 10 இலட்சம் மக்கள் பாதிப்பு



(டாக்கா)

பங்களாதேஷின் தென்கிழக்கு பகுதிகளில் பெய்து வரும் தொடர் பருவமழை காரணமாக ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி இதுவரை 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

சட்டோகிராம், காக்ஸ் பஜார், பண்டர்பன் உள்ளிட்ட 7 மாவட்டங்கள் இந்த வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 2.6 இலட்சம் குடும்பங்கள் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டு, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

போக்குவரத்து துண்டிப்பு, மின்சாரமின்மை போன்ற காரணங்களால் மீட்புப் பணிகள் சவாலாக மாறியுள்ள சூழலில், இராணுவம் மற்றும் கடற்படையினர் படகுகள் மூலம் மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் மற்றும் மருந்துகளை வழங்கி வருகின்றனர்.

காக்ஸ் பஜார் பகுதியில் உள்ள ரோஹிங்கியா அகதிகள் முகாம்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் மட்டும் 16 பேர் உயிரிழந்துள்ள நிலையில், காலநிலை மாற்றத்தால் இது போன்ற தீவிர இயற்கை பேரிடர்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (3)

## கடும் எரிபொருள்

# கியூபாவில் தழுவிய மி

(ஹவானா)

தீவு நாடான கியூபாவில் நிலவி வரும் மிக மோசமான எரிசக்தி தட்டுப்பாடு காரணமாக, அங்குள்ள தேசிய மின் கட்டமைப்பு மீண்டும் முழுமையாக முடங்கியுள்ளது.

இதன் விளைவாக, கடந்த ஐந்து நாட்களில் இரண்டாவது முறையாக அந்த நாடு முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, பல மில்லியன் மக்கள் இருளில் மூழ்கினர்.

தொடர்ந்து மோசமடைந்து வரும் இந்த மின்கட்டமைப்பு முடக்கத்தால் மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ததலின் எதிரொலி

# ...நீரிணையை ...ஈரான்!

(டெஹ்ரான்)..........................

**அமெரிக்காவின் தாக்குதல் முடிவுக்கு வரும் வரை, ஹார்முஸ் நீரிணையை மறு அறிவித்தல் வரை மூடுவதாக ஈரான் அறிவித்துள்ளது.**

வர்த்தக எண்ணெய் கப்பல்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே பதிலடி தாக்குதல்கள் இடம்பெற்றன.

அமெரிக்கத் தாக்குதல்களில் 17 பேர் உயிரிழந்ததுடன், 115 பேர் காயமடைந்துள்ளனர்.

அதற்கு பதிலடியாக வளைகுடா பிராந்தியத்தில் உள்ள அமெரிக்காவின் கூட்டணி நாடுகளின் இலக்குகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த பதற்றமான சூழலில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரானின் தாக்குதல்கள் காரணமாக போர்நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

அதேவேளை, ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி, போர்நிறுத்த ஒப்பந்தத்தை அமெரிக்காவே மீறியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இருப்பினும், பேச்சுவார்த்தைகளைத் தொடரும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும், மத்தியஸ்த நாடுகள் சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (3)

# அலி கமேனியின் மரணத்திற்கு நிச்சயம் பழிவாங்கியே தீருவோம்

## ஈரான் உச்ச தலைவர் சூளுரை



(டெஹ்ரான்)

அமெரிக்க மற்றும் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் மரணத்திற்கு "நிச்சயமாக பழிவாங்கப்படும்" என அவரது மகனும், ஈரானின் புதிய அதி உயர் தலைவருமான அயதுல்லா மொஜ்தபா கமேனி நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள எழுத்துப்பூர்வ அறிக்கை ஒன்றில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் அவரது தந்தையின் இறுதிச் சடங்குகள் தொடங்கியதில் இருந்து, புதிய, உச்ச தலைவர் விடுத்துள்ள முதலாவது பொதுச் செய்தி இதுவாகும். இந்த அறிக்கை ஈரானிய அரச தொலைக்காட்சியில் வாசித்துக் காட்டப்பட்டுள்ளது.

பழிவாங்குதல் என்பது "நாட்டின் கோரிக்கை" எனவும், அது "நிச்சயமாக" நிறைவேற்றப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பழிவாங்கும் நடவடிக்கையானது ஈரானை மட்டும் சார்ந்திருக்கவில்லை எனவும், அது "உலகெங்கிலும் உள்ள சுதந்திரமான மக்களை" பொறுத்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"குற்றவாளிகள் மற்றும் அவமானத்திற்குரிய கொலையாளிகளிடமிருந்து, தியாகியான தலைவர் மற்றும் இந்த இரு போர்களிலும் தியாகிகளான அனைவரினதும் இரத்தத்திற்குப் பழிவாங்குவோம் என நாங்கள் உறுதியளிக்கிறோம்.

நாங்கள் அங்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும், இது மிக விரைவில் நிறைவேற்றப்படும் உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு சுதந்திர மனிதனும் இந்த தெய்வீகப் பணியின் ஒரு பகுதியை நிறைவேற்றுவார்கள்" என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (3)

## ...ருள் நெருக்கடி

# ...வில் நாடு ...மின்வெட்டு

இயல்பு வாழ்க்கை முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் பொருளாதாரமும் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

மின்கட்டமைப்பைச் சீரமைத்து, மின் விநியோகத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான தீவிர முயற்சிகளில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் உட்கட்டமைப்புப் பராமரிப்புப் பணிகள் தொய்வடைந்துள்ளதால், மின்சாரத்தை முழுமையாக மீட்டெடுப்பதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது. (3)

# வியட்நாமில் படகு கவிழ்ந்து விபத்து



15 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(ஹனோய்)

வியட்நாமின் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான பு குவோக் தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் படகு கவிழ்ந்ததில் 15 இந்திய சுற்றுலாப் பயணிகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

36 பேருடன் சென்ற அந்த படகில் 32 இந்திய சுற்றுலாப் பயணிகள், 3 பணியாளர்கள் மற்றும் ஒரு உதவியாளர் பயணம் செய்துள்ளனர்.

ஹோன் மே ருட் தீவில் இருந்து அன் தோய் துறைமுகத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, சுமார் 400 மீற்றர் தொலைவில் கடல் சீற்றம் காரணமாகப் படகு கவிழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் 21 பேர் உயிர் பிழைத்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்து குறித்து வியட்நாமில் உள்ள இந்தியத் தூதரகம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவ ஹோ சி மின் நகரம் மற்றும் ஹனோயில் அவசர கால உதவி மையங்களை நிறுவியுள்ளது.

தற்போது மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் விபத்து தொடர்பான கூடுதல் தகவல்களைத் தூதரகம் கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உரும்பிராய் கற்பக பிள்ளையார் வீதி பொதுமக்கள் பாவனைக்காக கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கிராமிய பாதைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி மக்கள் பவனைக்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ. ரஜீவன் மற்றும் க. இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கற்பக பிள்ளையார் கோவில் வீதியானது 1.5 நீளமான வீதியாகும். இதன் புனரமைப்பு பணி 74.5 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-33)



நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்தந்தை ரெஜினோல்ட் அடிகளார் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். (படம்-ஜோசப்நயன்)

# முதியவர் மீது தாக்குதல் நடத்தி .....பணம் கொள்ளை....

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

(அராலி)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வியாபார நடவடிக்கைகளுக்காகச் சென்று கொண்டிருந்த முதியவர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தி, அவரிடமிருந்த ஒரு தொகை பணம் இருவரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட முதியவர் நேற்று முன்தினம் சங்கரத்தையிலிருந்து நவாலி நோக்கிச் செல்லும் வீதியூடாகத் தனது வியாபாரப் பணிகளுக்காகச் சென்று கொண்டிருந்தார்.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் அவ்வீதியால் வந்த இரண்டு நபர்கள் முதியவரை வழி மறித்து, முகவரி கேட்பது போலப் பாசாங்கு செய்துள்ளனர்.

முதியவர் அவர்களுக்குப் பதிலளிக்க முற்பட்ட வேளையில், திடீரென அவர் மீது தாக்குதல் நடத்திய குறித்த நபர்கள், அவர் வியாபாரத்திற்காகத் தன்னிடம் வைத்திருந்த ஒருதொகை பணத்தைப் பலவந்தமாகப் பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-104)


## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ/து)

### காணி விற்பனை

சங்கத்திற்கு சொந்தமானதும் சுன்னாகம் சந்தைக்கு அருகாமையிலுள்ள செல்லர் வளவு மாணிக்க தியாகராசா வீதி, சுன்னாகம் பகுதியில் வாகன போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி, மின்சார வசதி, மலசல கூட வசதிகள் உள்ள நிலப்பரப்பு 01 குழி 17.93 விஸ்தீரணம் கொண்ட காணியும், பிறிதொரு மேற்குறித்த வசதிகள் உள்ள சுன்னாகம் ஐயனார் கோவிலுக்கு அருகிலுள்ள கல்லாரைப் பகுதியில் குழி 15.46 விஸ்தீரணம் கொண்ட காணியும் விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புவர்கள் மீளளிக்கப்படாத கட்டுப்பணம் ரூபா 1000.00 செலுத்தி சங்கத்தால் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை சங்கத்தில் பெற்று தெளிவாக பூர்த்தி செய்து **"தலைவர், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 27.07.2026ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும் கடித உறையில் இடது பக்க மேல் பகுதியில் காணி விற்பனைக்கான கேள்விப்பத்திரம் என குறிப்பிடுதல் வேண்டும்.மேலதிக விபரங்களுக்கு 0212240022 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்,**
**சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

C-6029



## INVITATION FOR BIDS(IFB)

### Kilinochchi District Secretariat Works

The Chairman of Departmental Procurement Committee of Kilinochchi District Secretariat invites sealed bids from interested eligible and qualified bidder for the Works mentioned in the table from qualified bidders who possess CIDA registration for the grade given below.

1. Bidding will be conducted through **National Competitive Bidding** according to the Procurement guideline & Manual 2024.
2. A complete set of Bidding Documents may be obtained from 14.07.2026 to 27.07.2026, between 09:00 hrs and 15:30 hrs on working days, upon payment of a non-refundable fee of Rs. 3,500 to the District Secretary, Kilinochchi, at the Finance Branch of the District Secretariat.
3. The duly completed Bids must be delivered to **"Chairman, Departmental Procurement Committee, Kilinochchi District Secretariat, Kilinochchi"** or deposited in the "Procurement Box" available in the **Chief Accountant's Room, Finance Branch** on or before **10.00 Hrs on 28th of July 2026.** Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
4. Bidders shall submit only the purchased bid document.
5. A Pre Bid Meeting will be held on **23.07.2026** at 10.00 Hrs at **Conference Hall, District Secretariat, Kilinochchi.**
6. All rights are reserved to the Chairman of DPC to accept, reject or partially accept of any bids at any stage without paying any compensation to any party.

| Description of Works | Estimated civil Cost Rs Mn. (without VAT in Mn) | CIDA Grade & Specialty | Contract Period (in Days) | Non-Refundable Fee. | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity |
| Reconstruction of Access Road for Premises of Vannerikulam tourism in Kilinochchi **KN/DPS/DO02/TOU/01/W/01** | 7.90 | C8 or Above Highway | 60 | 3,500 | 13.10.2026 | 120,000 | 10.11.2026 |
| Construction of Vehicle Shed at Vannerikulam tourism in Kilinochchi **KN/DPS/DO02/TOU/01/W/02** | 6.50 | C8 or Above Building | 60 | 3,500 | 13.10.2026 | 100,000 | 10.11.2026 |
| Construction of Washroom at Vannerikulam Torism (Sanitary Development) **KN/DPS/DO02/TOU/01/W/03** | 8.00 | C8 or Above Building | 60 | 3,000 | 13.10.2026 | 120,000 | 10.11.2026 |
| Construction of Observation Hall at Vannerikulam tourism in Kilinochchi **KN/DPS/DO02/TOU/01/W/04** | 4.00 | C9 or Above Building | 60 | 3,500 | 15.09.2026 | 60,000 | 13.10.2026 |
| Construction of Path, Bathing Area & earth filling works at Vannerikulam tourism in Kilinochchi **KN/DPS/DO02/TOU/01/W/05** | 2.20 | C9 or Above Building | 60 | 3,500 | 15.09.2026 | 40,000 | 13.10.2026 |
| Supplying and Installation of Soler Pannel to Tourism Premises at Vannerikulam in Kilinochchi **KN/DPS/DO02/TOU/01/W/06** | 1.60 | EM05 or above /SLSEA Registered | 45 | 3,500 | 27.10.2026 | 30,000 | 24.11.2026 |

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**Kilinochchi District Secretariat, Kilinochchi,**
**T.P/ Fax:- 021 228 5352, Web http://kilinochchi.dist.gov.lk**

C- 6027


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு மிக உயர்ந்த மட்டத்தில்

## அரசு அறிவிப்பு


(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றது முதல் நாட்டின் தேசிய பாதுகாப்பு மிக உயர்ந்த மட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சூழ்நிலைகள் காரணமாக பொதுப்பாதுகாப்பு தொடர்பான சில கவலைகள் எழுந்தபோதிலும், அந்தப் பிரச்சினைகளுக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வரும் நேர்மறையான நடவடிக்கைகளை எதிர்க்கட்சியினர்



நாளாந்தம் விமர்சித்து வருகின்றனர்.

மேலும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நியமனம் மற்றும் போகம்பரை சிறைச்சாலையை மீண்டும் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்கள் குறித்து தேசிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் வரும் நாட்களில் தெளிவுபடுத்துவார் என அவர் தெரிவித்தார். (ந)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 35 ½<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Microsoft Tech. Associate, Rep.<br>எதிர்பார்ப்பு: Degree Job<br>தொ.இ: B/17075 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>2 இல் செவ்<br>கி.பா:10<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc,Msc,USA<br>எதிர்பார்ப்பு:உயர்பதவிகள்<br>தொ.இ: G/17006 |
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 44<br>8 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: HND in Agri. (France)<br>எதிர்பார்ப்பு: Only France<br>தொ.இ: B/17077 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L,தையல்<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/17008 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 18 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:HNDE, Eng.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/17078 | பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 20 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: LLB, Lawyer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/17010 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா: 49 ½<br>7 இல் செவ் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BA, DO<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/17079 | பிறப்பு: 2002 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>2 இல் சூரி செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/17013 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>8 இல் செவ் உயரம்:5'11"<br>தகைமை/தொழில்: Software Eng, IT Officer<br>எதிர்பார்ப்பு: Degree தகுதியான பெண்<br>தொ.இ: B/17080 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>12 இல் செவ்<br>கி.பா: 16 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/17022 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 614

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



# குறை ஒரு குறையல்ல!

“என்னைவிட யோக்கியன் இந்த உலகத்திலே யாரும் இல்லை சேர்” என்றார் ஒருத்தர். அவரைவிட அயோக்கியன் வேறு யாரும் இருக்க முடியாது என்கிற முடிவுக்கு நான் உடனே வந்து விட்டேன். மனிதனுக்கு இருக்கின்ற ஒரு மிகப்பெரிய குறையே... தன்னிடம் இருக்கின்ற குறை அவனுக்குத் தெரியாமல் போகிறது தான்! ஆனால் அடுத்தவனிடம் இருக்கின்ற குறை இவனுக்குத் தெளிவாகத் தெரியும்!

ஒரு ஒட்டகம் ஒரு கொக்கைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டது. என்ன கேள்வி தெரியுமா?

“உன் கழுத்து ஏன் இப்படி வளைந்து போயுள்ளது” என்றது.

இதற்கு உடம்பே வளைந்திருக்கு... இதுபோய் கொக்கை நளினம் செய்தது.

இன்றைக்கு மனித சுபாவமும் கிட்டத்தட்ட இப்படித்தான் இருக்கின்றது.

இந்த உலகத்திலே குறையில்லாத மனிதர்கள் யாருமே கிடையாது. நாம உட்பட என்பதை முதலிலே நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு ஊரிலே ஒரு விற்பனை நிலையம் இருந்தது. செல்லப் பிராணிகளை விற்பனை செய்கின்ற நிலையம் அது. நாய், கிளி, பூனை... இப்படி நிறைய வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

நாய்க்குட்டி விற்பனை செய்கின்ற பகுதியிலே ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். விற்பனை செய்கின்ற நபரிடம் விலை கேட்டுக் கொண்டிருந்தான்.

“அதோ இருக்கின்றதே அந்த நாய்குட்டி என்ன விலை?” என்றான்.

“ஆயிரம் ரூபாய்!” என்றார்.

“சரி அது வேண்டாம்.. இது என்ன விலை?” என்றான். “ஐந்நூறு ரூபாய்!” என்றார்.

இந்த சின்ன பையன் கையிலே வைத்திருந்தது 50 ரூபாய். அதனாலே இதைவிட குறைந்த விலையில் கிடைக்குமா என்று பார்த்தான்.

அந்தக் கடையிலே ஒரு மூலையிலே சரியாக கவனிக்கப்படாமல் ஒரு நாய்க்குட்டி உறங்கிக் கொண்டிருந்தது. பாவமாக கத்திக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததுமே இவனுக்கு அது மிகவும் பிடித்துப் போய் விட்டது! உடனே அந்தக் கடைக்காரரைப் பார்த்து, “அதோ அந்த மூலையிலே உறங்கிக் கொண்டிருக்கின்றதே... அந்த நாய்க்குட்டி என்ன விலை?” என்று கேட்டான்.

“தம்பி. அதற்கு ஒரு கால் ஊனம்... அதனாலே அது உன்னுடன் குதித்து விளையாடவோ ஓடவோமுடியாது” என்றார் அவர்

“அது தெரிந்து தான் கேட்கிறேன். அதனுடைய விலை எவ்வளவு அதை மட்டும் சொல்லுங்கள்!” என்றான். “தம்பி... இது கால் ஊனமுள்ள ஒரு நாய். இதைப் போய் காசு கொடுத்து வாங்குவதற்கு யாராவது பிரியப்படுவார்களா? இதை உனக்கு இலவசமாகவே... தருகின்றேன் எடுத்துக்கொண்டு போ!” என்றார்.

இதைக் கேட்டதும் அந்தச் சிறுவனுக்குக் கோபம் வந்து விட்டது.

“நீங்கள் ஒன்றும் சும்மா கொடுக்க வேண்டாம்... இந்தாங்கள் ஐம்பது ரூபாய்... இதை வைத்துக் கொண்டு நாய்க்குட்டியைக் கொடுங்கள்..!”- என்றான்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை ஆச்சரியமாகவே இருந்தது. “சரி” என்று பணத்தை வாங்கிக்கொண்டு நாய்க்குட்டியைத் தூக்கிக் கொடுத்தார்.

இந்தச்சிறுவன் அந்த நாய்க்குட்டியை இரண்டு கையாலும்வாங்கினான். மார்போட பிரியமாக சேர்த்து அணைத்துக் கொண்டான். தெருவிலே இறங்கி நடந்தான்.

கடைக்காரர்` ஆச்சரியமாக அவனைப் பார்த்தார். அப்போது தான் அவருக்கு ஒரு விடயம் புரிந்தது. அந்தச் சிறுவன் தெருவிலே நாய்க்குட்டியை மார்போட அணைத்துக் கொண்டு, நொண்டி நொண்டி நடந்து போய்க்கொண்டிருக்கான். ஆமாம், அவனுக்கும் ஒரு கால் ஊனம். இந்த நாய்க்குட்டியை யாருமே வாங்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தார். குறையுள்ள அதற்கும் ஒரு எஜமானன் கிடைத்து விட்டான்.

அதனாலே ஊனம் ஒரு குறையல்ல என்கின்ற உண்மையை அந்தக் கடைக்காரர் புரிந்து கொண்டார்.

நமது ஆள் ஒருத்தர் கொஞ்சம் வயசானவர். எழுந்து சரியாக நடக்க முடியாது. சாய்வு நாற்காலியிலேயே எப்போதும் உட்கார்ந்திருப்பார்.

அவர் தனக்குத் துணையாக ஒரு நாயை பக்கத்திலே வைத்திருந்தார். அதுவும் மிகவும் வயதான ஒரு நாய் எழுந்து இருக்கவே சிரமப்படும். நடக்கவும் முடியாது. அவருக்கு பக்கத்திலேயே இதுவும் சோர்ந்து போய் படுத்துக் கொண்டிருக்கும்.

அந்தப் பெரியவரை பார்க்க வந்த ஒருவர் கேட்டார். “ஏன் ஒரு சின்ன பையனை உங்களுக்குத் துணையாக வைத்திருக்கக்கூடாதா? இந்த நாயை உங்களுக்குப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருக்கிறீர்களே.. உங்களுக்கு ஒரு ஆபத்து என்றால் இது எப்படி உங்களுக்கு உதவ முடியும்” என்றார்.

“எனக்கு ஒரு ஆபத்து என்றால் அந்த சமயத்திலே இந்த நாய் என்னை தனியாக விட்டுவிட்டு ஓடிப்போயிடாமல் இருக்கும் இல்லையா... அதனாலே தான் இதை வைத்திருக்கின்றேன்!” அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கல்கியின்** பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1086





"அதைப்பற்றிக் கவலை இல்லை, முருகய்யா! யானையின் காலைக் கட்டியுள்ள சங்கிலியை அவிழ்த்து விடு!" என்றார் இளவரசர். முருகய்யன் அவ்வாறு அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கும் போதே, "இதோ யானைப்பாகன் வந்துவிட்டான்!" என்று ஒரு குரல் கேட்டது. "வந்துவிட்டான்! வந்துவிட்டான்!" என்று பல குரல்கள் ஒலித்தன.

கையில் அங்குசத்துடன் யானைப்பாகன் ஓடிவந்து கொண்டிருந்தான். கூட்டத்திலிருந்தவர்கள் அவசர அவசரமாக விலகிக் கொண்டு அவனுக்கு வழி விட்டார்கள்.

பொன்னியின் செல்வரும் "நல்ல வேளை!" என்று பெருமூச்சு விட்டு, யானைப்பாகன் ஓடி வந்துகொண்டிருந்த திசையை நோக்கினார்.

பாவம்! ஒருநாள் இரவு அனுபவத்தில் அவன் எவ்வளவு மாறிப் போயிருக்கிறான்? பயப்பிராந்தி கொண்டவனாக அல்லவா தோன்றுகிறான்?

ஒரு கையில் அங்குசம் வைத்துக்கொண்டிருந்த யானைப்பாகன், யானையின் அருகில் வந்து அதன் துதிக்கையை இன்னொரு கையால் தொட்டான்.

யானை உடனே அவனைத் துதிக்கையால் சுழற்றிப் பிடித்துத் தலைக்கு மேலே தூக்கியது. கேட்டவர்கள் பீதி கொள்ளும்படியாகப் பிளறிவிட்டு, யானைப்பாகனை வீசி எறிந்தது! யானைப்பாகன் வெகு தூரத்திலே போய் விழுந்தான். அவன் கையில் வைத்திருந்த அங்குசம், இன்னும் அப்பாலே போய் விழுந்தது.

"யானைக்கு மதம் பிடித்துவிட்டது!" என்ற பயங்கரம் நிறைந்த குரல் அந்த ஜனக் கூட்டத்திலே எழுந்தது. ஜனங்கள் நாலா பக்கமும் சிதறி ஓடத் தொடங்கினார்கள்!

### அத்தியாயம் 18
### ஏமாந்த யானைப் பாகன்

"சந்தர்ப்பம் என்பது கடவுளுக்கு ஒரு புனை பெயர்" என்பதாகத் தற்கால அறிஞர் ஒன்று கூறியிருக்கிறார். கடவுள் தாம் செய்யும் காரியத்தைத் தாம் செய்தது என்று காட்டிக் கொள்ள விரும்பாத போது "சந்தர்ப்பம்" என்னும் புனை பெயரைச் சூட்டிக் கொள்ளுகிறாராம்! உலக சரித்திரத்தில் மிகப் பிரசித்திபெற்ற வீரர்கள், அரும் பெரும் காரியங்களைச் சாதித்த மகான்கள், இவர்களுடைய வரலாறுகளைப் பார்க்கும்போது, சந்தர்ப்பம் இவர்களுக்கு மிக்க உதவி செய்திருக்கிறது என்பதை அறியலாம். அவர்களிடம் கடவுள் விசேஷ கருணை காட்டி அத்தகைய சந்தர்ப்பங்களை அனுப்புவதாகச் சிலர் கூறுவர். அவரவர்கள் பிறந்த வேளையின் மகிமை ஜாதகத்தின் பலன், பிரம்மா எழுதிய, பூர்வஜன்ம சுகிர்தம், என்றெல்லாம் வாழ்க்கையில் ஏற்படும் அனுகூலமான சந்தர்ப்பங்களுக்குக் காரணங்கள் கற்பிப்போரும் உண்டு.

நம் காலத்தில் காந்தி மகான் தென்னாப்பிரிக்கா போவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படாதிருந்திருந்தால் அவர் மனித குல சிரேஷ்டர் என்றும், அவதார புருஷன் என்றும் மக்களால் போற்றப்படும் நிலையை அடைந்திருக்க முடியுமா?

சந்திரகுப்தன் விக்கிரமாதித்தன், ஜீலியஸ் ஸீஸர், நெப்போலியன், டியூக் ஆப் வில்லிங்டன், ஜார்ஜ் வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் எவ்வளவோ உதவி செய்திருக்கின்றன என்பதை அறிந்திருக்கிறோம்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அம்மா என்றால் அன்பு



செல்விக்குக் கொஞ்சம் முன்கோபம் அதிகம். சிடுமூஞ்சி என்று எல்லாரிடமும் கெட்ட பேர் எடுத்து விட்டாள். 'சின்ன வயதில் நல்ல குணங்கள் பழகாவிட்டால் என்ன செய்வது?' என்று அவள் அம்மா வருத்தப்படாத நாட்களே இல்லை.

ஒருநாள் கொஞ்சம் கோபம் தலைக்கேறிய அம்மா, செல்வியிடம் 'உன்னால் எனக்கு எந்த பயனுமில்லை.. நீ இந்த வீட்டில் இனி இருக்க வேண்டாம். அப்படித் தொடர்ந்து இருக்கணும் என்று நினைத்தால் நான் சொல்வதைச் செய்தால் இருக்கலாம்' என்றாள்.

பள்ளிக்கூடத்தில் அவள் எல்லோரையும் அடித்து விடுவதாகவும் எல்லாரிடமும் சண்டை போடுவதாகவும் ரிப்போர்ட் வந்தது.

வீட்டில் தோட்டம் போன்ற செடி கொடிகள் நிரம்பி இருந்ததால் அவள் அம்மா ஒருநாள் 'இதோ பார், செல்வி, நீ போய் நம் தோட்டத்துக்கு வரும் மயிலின் தோகையிலிருந்து ஒரு கொத்துக் கொண்டு வா! கொண்டு வந்தால் வீட்டில் இருக்கலாம்' என்று கண்டித்து அனுப்பிவிட்டாள்.

வீட்டிலிருந்து வெளியேறிய செல்வி, வீட்டிலிருந்து நிறைய நிலக்கடலைகளை அள்ளிக் கொண்டு போனாள். அப்போது தோட்டத்துக்கு ஒரு நீண்ட தோகையுள்ள மயில் மேய வந்திருந்தது. அதற்கு அருகில் சென்று நிலக்கடலைகளைப் போட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்தாள். மயில் அவளோடும் இணங்கிப் பழக அதனை நெருங்கி, அதன் தோகைகளைப் பறித்தாள். அது அவளை ஒன்றும் செய்யாமல் இருந்தது.

வீட்டுக்கு கொத்துத் தோகையோடு வந்து தாயிடம் தர அவள் அம்மா அதனை விருட்டென எரியும் நெருப்பில் போட்டு விட்டாள்.

'அம்மா.. இதற்கு நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்று தெரியுமா? இப்படி எரியும் நெருப்பில் போட்டு விட்டீர்களே?' என்று வருந்த, அவள் அம்மா மென்மையாகச் சொன்னாள். 'நான் இதைப் பறித்துவரச் சொன்னது எனக்காக அல்ல., எதற்கு என்று தெரியுமா? உனக்குப் பொறுமை வரத்தான்' என்று சொல்ல, தன் முன்கோபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விடப் பழகிக் கொண்டாள் செல்வி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

– *திருக்குறள்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தியை தடுக்கும் கரங்கள்

அபிவிருத்தி பற்றிப் பேசுவது தான் எங்களுக்கு வெறுப்பான செயலாயிற்று. ஆம், பலாலி விமான நிலையம் இன்று வரை அபிவிருத்தியின்றிக் காணப்படுகிறது.

சுருங்கக்கூறின் தென்பகுதியில் உள்ள கிராமங்களில் இருக்கக் கூடிய மிகச் சிறிய புகையிரத நிலையத்திற்கு ஒப்பானதாகவே பலாலி விமான நிலையம் இருப்பதைக் காண முடிகிறது.

ஆம், பலாலி சர்வதேச விமான நிலையம் எனப் பெயர்சூட்டப்பட்டாலும் பலாலி – சென்னை விமான சேவை மட்டும் ஒரு நாளுக்கு ஒரு தடவை என்பதாக நடந்தாகிறது.

அதிலும் வசதியான விமானங்கள் சேவையில் ஈடுபடுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் ஒருபுறமிருக்க, பயணிகள் எடுத்து வருகின்ற பொதிகளின் நிறைகள் மிகக் குறைவாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

அதாவது, சென்னையில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக இலங்கை வரும் பயணி ஒருவர் தனது விமானப் பயணச்சீட்டுக்கான கட்டணத்துடன் முப்பது கிலோ எடையுள்ள பொருட்களை எடுத்து வரமுடியும்.

ஆனால் சென்னையில் இருந்து பலாலி விமான நிலையமூடாக யாழ்ப்பாணம் வருகின்ற பயணி ஒருவருக்கு மேற்குறிப்பிட்ட நிறை பதினைந்து கிலோவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏற்றத்தாழ்வு ஏன் என்பது தான் புரியவில்லை.

பலாலி விமான நிலையத்தை தக்கமுறையில் இயக்குவதற்கு தென்பகுதிக்கு விருப்பமில்லை என்பது மட்டுமல்ல. நம்மவர்களில் ஒரு தரப்பினருக்கும் அது விருப்பமில்லை என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது பலாலி விமான நிலையத்தில் இருந்து சென்னைக்கும் சென்னையில் இருந்து பலாலிக்குமான விமான சேவையைத் தடுத்து விடுவதில் இன்னமும் நம்பிக்கையோடு செயலாற்றுகின்ற நம்மவர்கள் இருக்கின்றனர்.

இவர்களின் நடவடிக்கையின் எதிர்வினையாகவே உயர்ந்த பயணக் கட்டணம் – குறைந்த எடையுள்ள பொதி என்ற நியாயமற்ற முறைமை பலாலி விமான நிலையத்தில் அரங்கேற்றப்படுகிறது.

ஆம், பலாலி சர்வதேச விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டு அது சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும் போது, அதனால் வடபகுதி மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெறுவர்.

அதிலும் குறிப்பாக வடக்கு மக்களின் பொருளாதாரம் முன்னேற்றமடைவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன் வர்த்தக ரீதியாக தமிழகத்து உற்பத்திகளின் உள்ளீடுகளை இங்கு கொண்டு வந்து, அதனூடு வர்த்தக செயற்பாடுகளும் வேலைவாய்ப்புகளும் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களும் நிறையவே உண்டு.

இருந்தும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டால், அஃது தங்களின் உச்ச வருமானத்திற்குப் பங்கமாகிவிடும் எனப் பயந்தவர்கள் பலாலி விமான நிலையம் இப்படி இயங்குவதையே விரும்புகின்றனர்.

உண்மை. பலாலி விமான நிலையத்திற்கு வருகை தந்த அமைச்சர்கள் விரைவில் பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவோம் எனக் கூறுவர். ஆனால் அவை எதுவும் இன்று வரை நடந்தாகவில்லை.

கூடவே பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கான எங்களின் எதிர்ப்பும் சேர்ந்து கொண்டு எம் மக்களின் வாழ்வை வஞ்சிக்கின்றன.

---

### எத்தனை சவால்கள் ஏற்பட்டாலும்

# நல்லூர், மடு உற்சவ காலத்தில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்

## அமைச்சர் பிமல் உரும்பிராயில் உறுதிபடத் தெரிவிப்பு

(உரும்பிராய்)

நல்லூர் திருவிழா மற்றும் மடு திருவிழா ஆகிய இரண்டு முக்கிய திருவிழாக்களுக்கும் சிறப்பு போக்குவரத்துச் சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், உரும்பிராய்ப் பகுதியில் புனரமைக்கப்பட்ட வீதியினைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக்கான புகையிரத சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், நல்லூர் திருவிழா மற்றும் மடு திருவிழாவிற்காகச் சிறப்பு புகையிரத சேவை மற்றும் பேருந்து சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறோம்.

மலையகப் பகுதிகளில் புகையிரதப் பாதைகள் சேதமடைந்துள்ளதால், அவற்றின் புனரமைப்புப் பணிகளுக்காகச் சில புகையிரத இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அதற்காக 4 - 5 புகையிரத இயந்திரங்கள் அங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

வரகாபொல பகுதியில் ஒரு புகையிரத இயந்திரம் இன்னமும் மீட்க முடியாமல் சிக்கியுள்ளது. இதனால் புகையிரத சேவைக்குத் தேவையான புகையிரத இயந்திரங்கள் இல்லாத நிலைமை காணப்படுகிறது. இது ஒரு தற்காலிகப் பிரச்சினை.

இவ்வாறான நெருக்கடிகள் இருந்தாலும், நல்லூர் திருவிழா மற்றும் மடு திருவிழா ஆகிய இரண்டு முக்கிய திருவிழாக்களுக்கும் நிச்சயமாக சிறப்பு சேவைகளை வழங்குவோம். அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் ஒரே ஒரு புகையிரத நிலையமான மாங்குளம் புகையிரத நிலையத்தில், அனைத்து புகையிரதங்களையும் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலருடன் கலந்துரையாடியுள்ளேன்.

புகையிரத திணைக்களத்தை டிஜிட்டல் மயமாக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகிறது. அதனால், முற்பதிவுப் பிரச்சினைகள் வராது என நினைக்கிறேன்.

பிற புகையிரத நேர அட்டவணையை கருத்தில் கொண்டு, மாங்குளத்தில் புகையிரதத்தை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

(ந-7,33)

---

# நாட்டில் பொருளாதாரம் மட்டுமல்ல நீதித்துறையின் சுயாதீனமும் வீழ்ச்சி

## கவலை கொள்கிறார் திலித் ஜயவீர

நாட்டில் நீதித்துறையின் சுயாதீனத் தன்மையானது வரலாற்றில் என்றுமில்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வஜன அதிகாரம் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர விசனம் வெளியிட்டுள்ளார்.

சர்வஜன அதிகாரம் கட்சியின் மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் காரியாலயம் நேற்று வெலிக்கடை பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்று இலங்கையில் பொருளாதாரம் மாத்திரம் வீழ்ச்சியடையவில்லை. மாறாக இந்நாட்டின் சமூகமும் கலாசாரமும், வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையும் பலவீனமடைந்து, சீர்குலைந்து போயிருக்கின்றது. இக்கட்டமைப்புக்குள் பணியாற்றுகின்ற சட்டத்தரணிகளும் இந்நாட்டை நேசிக்கின்ற மேன்மையான நீதிபதிகளும் கொண்டுள்ள கருத்து மிகவும் தெளிவானதாகும்.

இந்த நீதித்துறை கட்டமைப்பு குறித்தும், எமது சட்ட ஒழுங்கு குறித்தும், பொலிஸ் துறை மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு குறித்தும் மக்கள் மத்தியில் நிலவுகின்ற நம்பிக்கை மிக வேகமாகச் சீர்குலைந்து வருகின்ற ஒரு காலகட்டத்தையே நாம் தற்போது எதிர்கொண்டிருக்கின்றோம்.

எனவே, இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமாயின், அனைவரும் இந்நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு ஒன்றாக ஒன்றிணைய வேண்டும் என்றார்.

(ந-7)

---

# பதிவு செய்வதற்கான கட்டணம் உயர்வு

(கொழும்பு)

நிறுவனங்கள் மற்றும் சங்கங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணங்களை அதிகரிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, தனியார் நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 4,600 ரூபாவிலிருந்து 5,200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொது நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 23,000 ரூபாவிலிருந்து 26,400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

பொறுப்பு வரையறுக்கப்படாத நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 17,250 ரூபாவிலிருந்து 19,800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ந-7)

---

### நீர்கொழும்பு சிறை வன்முறை

# மரணித்த அதிகாரிகளுக்கு அதிகபட்ச இழப்பீடு

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 5 இலட்சம் ரூபா நிதி, ஆரம்பகட்டக் கொடுப்பனவு மாத்திரமே என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழங்கப்பட்ட இந்த நிதி தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குப் பதிலளிக்கும் வகையில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஏ.சி.கஜநாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

குறித்த அதிகாரிகளின் குடும்பங்களுக்கு 20 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான நிதியுதவி வழங்குவது தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தி வருகிறது.

அத்துடன், உயிரிழந்த அதிகாரிகளின் அனைத்து இறுதிக் கிரியைகளும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, இந்த மோதலில் காயமடைந்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இழப்பீடு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார.

(ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## உயிர்ச்சத்து $D_3$ இன் ஆரோக்கிய முக்கியத்துவமும் உணவுக் கூறுகளும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சூரிய ஒளி விற்றமின் என்று அழைக்கப்படும் விற்றமின் D3, நமது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் மிகவும் முக்கியமானது. பலர் அதை உணராவிட்டாலும் கூட, இந்த முக்கியமான ஊட்டச்சத்து நமது எலும்புகளை வலுவாக வைத்திருக்க உதவுகிறது. நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது நமது மனநிலையை உயர்த்துகிறது.மற்றும் எடையை நிர்வகிக்க உதவுகிறது.

இன்றைய உலகில், நம்மில் பலர் வீட்டுக்குள்ளேயே அதிக நேரம் செலவிடுகிறோம். மேலும் நமது உணவுகளில் பெரும்பாலும் போதுமான ஊட்டச்சத்து அல்லது கருமையான சரும நிறம் போன்ற காரணிகள் விறறமின் $D_3$ குறைபாட்டிற்கு வழிவகுக்கும். மேலும் விறறமின் D3 இன் நன்மை அதை இயற்கையாகவே எவ்வாறு பெறுவது மற்றும் சாப்பிட வேண்டிய உண வுகள் பற்றி விளங்கிக் கொள்ள வேண்டும்.

விற்றமின் $D_3$ என்பது (கோல்கால்சி / பெரால்) என்னும் கொழுப்பில் கரையக் கூடிய விற்றிமின் ஆகும். இது ஆரோக்கியமான எலும்புகள், பற்கள் மற்றும் நோய் எதிர்ப்பு செயற்பாட்டை பராமரிக்க மிகவும் முக்கியமானது. இது விற்றமின் D இன் இரண்டு முக்கிய வடிவங்களில் ஒன்றாகும். மற்றொன்று $D_2$ (எர்கோகால்சி / பெரால்) விற்றமின் $D_3$ சூரிய ஒளியில், குறிப்பாக புறஊதா B கதிர்கள் வெளிப்படும் போது தோலில் இயல்பாகவே உற் பத்தி செய்யப்படுகின்றது. பல விற்றிமின்களை போலல்லாமல், விற்றமின் $D_3$ உடலில் ஒரு ஹார்மோன் போலவே செயற்படுகின்றது. உற்பத்தி செய் யப்பட்ட அல்லது உட்கொண்ட பிறகு, அது கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களில்




அதன் செய லில் உள்ள வடிவமாக மாற்றப்படுகின்றது.

இது வலுவான என்புகள் மற்றும் சரியான தசை செயற்பாட்டிற்கு அவசியமான கல்சியம் மற்றும் பொஸ்பரஸ் அளவை கட்டுப்படுத்த உதவுகிறது. இதனால்தான் பால் செறிவூட்டப்படுகிறது, ஏனென்றால் விற்றமின் D3 நீங்கள் உண்ணும் உணவில் இருந்து கல்சியம் மற்றும் பொஸ்பரஸை உறிஞ்சுவதற்கு உங்கள் உடலிற்கு உதவுகிறது.

விற்றமின் $D_3$ ஆனது இரத்த அழுத்தத்தை பராமரிக்கவும்,இருதய ஆபத்தை குறைக்கவும் உதவுகிறது. அழற்சி எதிர்ப்பு முகவராக செயற்படுகிறது. மற்றும் நாள் பட்ட அழற்சி நிலைகளை நிரவகிக்க உதவுகிறது. புற்றுநோய் திசுக்களில் புதிய இரத்த நாளங்கள் உருவாகுவதை நிறுத்தி, புற்று நோய்கலங்களை அழித்து அவற்றின் பரவலை குறைப்பதன் மூலம் புற்றுநோய் வளர்ச்சியை மெதுவாக்க உதவுகிறது. விற்றமின் $D_3$ இன் குறைபாட்டின் அறிகுறிகளாக தசை பலவீனம் மற்றும் வலிகள் ,பலவீனமான என்புகள், களைப்பு , முடி கொட்டுதல், மன அழுத்தம், தோல் நோய்கள் போன்ற உடல் உபாதைகள் ஏற்படும் விற்றமின் $D_3$ நிறைந்த இயற்கை உணவுகளான கானாங்கெளுத்தி, சால்மன், டுனா போன்ற கொழுப்பு நிறைந்த மீன்கள், முட்டை மஞ்சட்கரு, வலுவூட்டப்பட்ட பால் மற்றும் பால்பொருட்கள், ஆரஞ்சுச்சாறு, காளான், கீரைகள், வெண்டிக்காய், ஓட்ஸ், தயிர், சீஸ், சசிக்கின் போன்றவற்றில் இருந்து அதிக விற்றமின் D கிடைக்கிறது. பாதாம்பருப்பும் சாப்பிடலாம். மற்றும் முக்கியமாக கொலஸ்ரோலில் இருந்து தான் விற்றிமின் D3 உருவாகிறது.

மதியம் 11 மணியிலிருந்து மதியம் 2 மணிவரை உள்ள புற ஊதாக்கதிர்களில் இருந்து தான் விற்றமின் D கிடைக்கிறது. அதே நேரம் தோலின் எவ்வளவு பகுதி வெயிலில் படுகிறதோ அதற்கேற்ப விற்றமின் D கிடைக்கிறது. இதனால் தான் விவசாயிகளுக்கு இந்த பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. அவர்களும் ஆரோக்கியமாக இருப்பார்கள். மற்றவர்கள் மதியம் சாப்பிட்ட பின்பு 15 நிமிட நேரமாவது வெயிலில் நடக்க வேண்டும்.

பொதுவாக சூரிய ஒளியில் உலர்த்தப்பட்ட காளானில் விற்றமின் D அதிகமாக இருக்கும். தயிர் தமிழர்களின் உணவில் முக்கிய இடத்தை பெற்றுள்ளது. தயிரில் ப்ரோபயாடிக்ஸ் மட்டுமன்றி, விற்றமின் D யும் அதிகம் இருக்கும்.

இது சிறந்த உமிழ்நீராக்கி என்பதோடு, உணவின் சுவையையும் மேம்படுத்துகிறது. தயிர்சாதமாக செய்து சாப்பிடலாம். பன்னீரிலும் விற்றமின் D இருக்கிறது. பாரம்பரிய உணவு மற்றும் சித்த மருத்துவத்தில் பத்தியமாக பயன்படுத்தப்படும் சுறா மீனில் இருந்தும் அதிகளவு விற்றமின் D கிடைக்கிறது.

இதனால் தான் சித்த மருத்துவத்தில் கர்ப்பிணிப் பெண்கள், மற்றும் பாலூட்டும் தாய் மாருக்கு சுறா பத்தியக்கறியாக பயன்படுத்தப்படுகிறது. கணவாய் மீனிலும் விற்றமின் D அதிகம் உண்டு. வாழைப் பழத்திலும் விற்றமின் D கிடைக்கிறது. விற்றமின் D ஆனது நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துவதில் அவசியமான பங்களிப்பை வகிக்கிறது. மற்றும் வைரஸ் , பக்ரீரியா தொற்றுக்களுக்கு எதிராக உடல் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளவும் உதவுகிறது. ஏனெனில் விற் றமின் D நேரடியாக தொற்று நோயை நிவர்த்தி செய்வதற்கு பொறுப்பான கலங்களுடன் தொடர்பு கொள்கிறது.

சிவப்பு நிற இறைச்சி வகைகளிலும் ஓரளவு விற்றமின் D கிடைக்கிறது. சித்த மருத்துவத்தில் நோயின்றி வாழ குறிப்பிட்டதின ஒழுக்க விடயங்களுள் சூரியக்குளியலில் ஆரோக்கிய முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் விற்றமின் $D_3$ உருவாகுதல், மற்றும் தூக்க சுழற்சியை சீராக்கி இயற்கையாகவே தூக்கத்தையும் வரவழைக்கும்.

இச் சூரியக்குளியலானது நாம் ஆற்றலுடன் ஆசுவாசத்துடன், புத்துணர்ச்சியுடன் இருப்பதாக உணர வைக்கும். விற்றமின் D யினை சூரிய ஒளிமூலம் இயற்கையாக பெறலாம். ஆனால் அது மட்டும் போதுமானது இல்லை. விற்றமின் D சத்து நிறைந்த உணவுகளை உண்பதன் மூலமும் தினசரி விற்றமின் D தேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

# இராசிபலன்

13.07.2026
ஆனி 29, திங்கட்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 6.54 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 3.57 மணிவரை
சுப நேரம் 11.59-1.29 மணிவரை
இராகு காலம்7.29-8.59 மணிவரை
போதாயன அமாவாசை

சந்திராஷ்டமம்
கேட்டை

வளவன்




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமார்த்தியமாக சமாளிப்பீர்கள்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உறவினர் வழியில் மன நிறைவான செய்தி ஒன்று வந்து சேரலாம்.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பொதுவாழ்வில் சுவாரசியம் தரும், செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு வியாபார விருத்தியுண்டு, பணபுழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வாக்கு மேன்மையுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டில் ஆனந்தம் கூடும்.




பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சந்தித்தவர்களால் சந்தோஷம் உண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள்.




புதிய திட்டங்கள் தீட்டி தொழில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதிலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பர பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




குடும்பத்தேவைகளை நிறைவுசெய்யும் எண்ணம் உருவாகும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

சரியான நேரத்தில் நன்றி சொல்லக் கற்றுக் கொள் அதுவே பேரின்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நம்பிக்கை...

சிறந்த முறையில் ஓர் அரசாங்கமாக எதிர்கொள்வோம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் தொடர்பில் பூரண விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறைக் கைதிகளின் மனித உரிமையைப் பாதுகாப்பதைப் போன்று பொலிஸ் உத்தியோகத்தர்களின் மனித உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்.

மனித உரிமைகளில் வேறுபாடுகள் கிடையாது என்பதை எதிர்க்கட்சியினர் விளங்கிக் கொள்ள வேண்டும். அனைத்தையும் அரசியலுக்குப் பயன்படுத்தும் கொள்கையில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் விடுபட வேண்டும்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு மற்றும் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் சிறந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

ஆகவே விசாரணைகள் வெளிப்படைத்தன்மையாக இடம்பெறுகிறது. போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும், ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றச்செயல்களை தடுப்பதற்கும் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளினால் பெருமளவிலானோர் கைது செய்யப்படுகிறார்கள். அதனால்தான் சிறைச்சாலையில் நெரிசல் தீவிரமடைந்துள்ளது என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். சிறைச்சாலைகளில் நெரிசல் ஏற்படும் என்பதற்காக குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யாமல் இருக்க முடியுமா?

நீர்கொழும்பு சம்பவத்தில் தற்போது எவரையும் குற்றஞ்சாட்ட முடியாது. பழி சுமத்த முடியாது. முதலில் நிலைமையைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான முறையில் விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என்றார். (ந-7)

## இராணுவத்தினர்...

லைப்படுத்திச் செயற்படும் சகல தரப்பினரும் இதற்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க அழைப்பு விடுத்தார்.

குருநாகல் நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பல்வேறு வாக்குறுதிகளை குறிப்பிட்டு ஆட்சிக்கு வந்தார். ஆனால் இன்றுவரை அந்த வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. ஒட்டுமொத்த பொருளாதார சுமையும் நாட்டு மக்கள் மீதே திணிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயற்றிட்டத்தை தவிர்த்து பொருளாதார மீட்சிக்கு எவ்வித திட்டங்களும் அரசாங்கத்திடம் கிடையாது. பலவீனமான நிர்வாகக் கட்டமைப்பினால் சகல தரப்பிலும் அரசியல் அழுத்தம் தீவிரமடைந்துள்ளதைக் காண முடிகிறது

ஆகவே கடந்த காலத்தை விமர்சித்துக் கொண்டிருக்காமல் சிறந்த எடுத்துக்காட்டாக செயற்பட வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பை முழுமையாக அழித்து, நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாத்த இராணுவ அதிகாரிகள் இன்று அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகியுள்ளார்கள். முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உட்பட இராணுவ உயர் அதிகாரிகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள். பிரபாகரனுக்குப் பக்கபலமாக இருந்த கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை இந்த அரசாங்கம் பாதுகாக்கிறது.

தேசியத்தைப் பாதுகாக்கும் அனைவரும் இதற்கு எதிராக ஒன்றுபட வேண்டும். சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது. தற்போது வலுவாகச் செயற்பட்டால்தான் எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ள முடியும் என்றார். (ந-7)

## வடக்கு கிழக்கு...

தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தை எட்டக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனவே திறந்த வெளிகளில் பணிபுரிபவர்கள் அடிக்கடி போதுமான அளவு நீரைப் பருகுமாறும், நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீட்டில் உள்ள முதியவர்கள் மற்றும் நோயாளிகளின் உடல்நிலை குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், சிறுவர்களை வாகனங்களுக்குள் தனியாக விட்டுச் செல்ல வேண்டாம் என்றும், வெயிலில் அதிக சிரமத்தைக் கொடுக்கும் வேலைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ந-7)

## நவம்..

வெளியிடப்படவுள்ளதுடன், அதன் முதலாம் வாசிப்பு ஒக்ரோபர் 07ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அமைச்சு ரீதியான செலவு மதிப்பீடுகளை உள்ளடக்கிய 2027ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம், அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக செப்ரெம்பர் 14ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 13 முதல் 20 ஆம் திகதி வரையிலும், குழுநிலை விவாதம் நவம்பர் 21 முதல் டிசம்பர் 14ஆம் திகதி வரையிலும் இடம்பெறவுள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

## நோயாளர்...

யுள்ளனர்.

அதேவேளை டெங்கு நோய்க்காரணமாக இதுவரை 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிகப்படியான நோயாளர்கள் கடந்த ஜூன் மாதத்தில் பதிவாகியுள்ளனர். அந்த எண்ணிக்கை 21,538 ஆகும்.

ஜூலை மாதத்தின் கடந்த 12 நாட்களில் மட்டும் 12,692 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதிகப்படியான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். மேல் மாகாணத்தில் மாத்திரம் 35,823 நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் 10,657 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 5,756 பேரும், கண்டி மாவட்டத்தில் 5,560 பேரும் என அதிகளவிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2026.07.12 சீட்டிழுப்பு இலக்கம் 6246
J 6 7 4 8 9 2
அத சம்பத J 4 8 9 2 சீட்டிழுப்பு இலக்கம் 0821

சுப தவசக்
திகதி 2026.07.12 சீட்டிழுப்பு இலக்கம் 0362
கடகம் 02 08 54 1886

தன நிதானய
திகதி - 2026.07.12 சீட்டிழுப்பு இலக்கம் - 2276
R 36 48 76 80 R
ஞாயிறு போனஸ் இலக்கம் 1686

மெகா பவர்
திகதி 12/07/2026 சீட்டிழுப்பு இலக்கம் 2594
S 07 22 24 35 67

ஜய
திகதி 2026.07.12 சீட்டிழுப்பு இலக்கம் 0514
0 7 6 4 5
ஞாயிறு போனஸ் இலக்கம் 2661

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4488
சீட்டிழுப்பு திகதி 12.07.2026
P 34 52 58 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 1555
கன்னி 01 39 48 52 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.07.2026 வெற்றி வாரம் 0954
D 3 2 8 5 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,825,050.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3220 25000 பணப் பரிசு 55492
சீட்டிழுப்பு திகதி 2026.07.12 தினம் ஞாயிற்றுக்கிழமை
23 32 33 35 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,828,124.00

சனிதா
திகதி 12.07.2026 வெற்றி வாரம் 5381
18 32 37 65 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,831,176.80
61609

சசிரி
வெற்றி வாரம் 1050 சீட்டிழுப்பு திகதி 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை
19 21 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,436,360.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4932 சீட்டிழுப்பு திகதி 12.07.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
16 21 24 37
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 16 05 30 41 72
சீட்டிழுப்பு வாரம் 2396 12.07.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.314,256,736.00

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை வெற்றி வாரம் : 3046 சீட்டிழுப்பு திகதி : 2026.07.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,829,177.60
38 63 67 73 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாப்பிள்ளை தேவை

1. வேலணை, இந்து, 1987, உத்தராடம், BSc Mathematics, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (28240)
2. உரும்பிராய், இந்து, 1988, மிருகஷீரிடம், BSc (Hons) software Engineering and MBA, Computer Engineering, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (31812)
3. புங்குடுதீவு, இந்து, 1989, ஆயிலியம், Master of Science, Researcher, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (58183)
4. சாவகச்சேரி, இந்து, 1990, மகம், Developmental Supervisor, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(38484)
5. மாங்குளம், இந்து, 1992, சித்திரை, Bachelor of Engineer, Singapore பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (57495)
6. இருபாலை, இந்து, 1993, திருவோணம், master in finance accounting, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49520)
7. சுதுமலை, இந்து, 1994, சுவாதி, CPA, Accountant, Divorce, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33103)
8. சாவகச்சேரி, இந்து, 1995, கேட்டை, Social media manager, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (44161)
9. இடைக்காடு, இந்து, 1996, ரோகிணி, MBBS, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (45587)
10. நல்லூர், இந்து, 1991, விசாகம், BSc, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55115)

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு. (C-6032)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193



## புதிய பிரிவுகள் ஆரம்பம்
18.07.2026

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AAI, AA2, AA3)
Qualification :- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களிலும் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
"New Syllabus" - Business Level
Qualification :- G.C.E A/L 3 Passes
(Medium - Tamil & English)

Further Details :- Jaffna College
Undergraduate Dept.
464, Hospial Road, Jaffna.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், கொமர்ஷல் வங்கி அருகில்)
021 222 3382 / 0774405917
(C-6033)



## காணி விற்பனைக்கு

யாழ். மருத்துவ பீடத்திற்கு முன்னால் உள்ள கருவப்புலம் லேனில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு :
077 662 4387
077 162 9385
(8035)


## தமிழ் பேசும்...

மலையகத் தமிழ் மக்கள் நலன் சார்ந்து செயற்படும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இவற்றுடன் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முன்னேற்றக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளே இவ்வாறு ஒருமித்துப் பயணிக்க வுள்ளன.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஊடகவிய லாளர் சந்திப்பில், மக்கள் சார்ந்த பொது விடயங்களில் இணைந்து பணியாற்றுவதற்கான உடன்படிக்கையை ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளும் அறிவிக்கவுள் ளன.

தற்போதைய சூழலில் சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை இதன் ஊடாக அடைய வாய்ப் புள்ளதாகவும் இது இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களின் நீண்டகாலத் தேவைகளை வென்றெடுக்க வழி சமைக்கும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-6036)
076 825 7716 (ஆகாஸ்)



## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

**அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349
(C-6034)

- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்.
- 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
- அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
- உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

கிளைகள்
# 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. # 01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. CTB பஸ் டிப்போ எதிரில் பருத்தித்துறை. கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.


# மரண அறிவித்தல்




## திருமதி அகிலேஸ்வரன் லோகேஸ்வரி
(முன்னாள் உபதபாலதிபர், தட்டையன்புலம்)

புங்குடுதீவு 7ம் வட்டாரம் வரதீவைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வு சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அகிலேஸ்வரன் லோகேஸ்வரி அவர்கள் கடந்த (11.07.2026) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - நல்லதங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற அகிலேஸ்வரன் (காந்தி) அவர்களின் அன்பு மனைவியும் விஜிதா (விஜி, யாழ்ப்பாணம்), அமல்ராஜ், சர்மிளா (சூட்டி, யாழ்ப்பாணம்), ராகுலன் (றொசான், லண்டன்), சௌத்ரி (பிரசன்னா, லண்டன்), கஜேந்திரன் (சுமன், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேந்திரன், பாலசிவராம் (ஆசிரியர் - அச்செழு மெதடிஸ் மிஷன் த.க.பாடசாலை), சுகிர்தா (சுதா, லண்டன்), கவிதா (லண்டன்), யசோதரை (யசோ, லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற இராஜசிங்கம் (தபால் ஊழியர்), ஸ்ரீராகினி (பபி, சுண்டுக்குளி), ரவிதாஸ் (ரவி, சுண்டுக்குளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், வேதாரணியம்பிள்ளை, கனகாம்பிகை, யோகாம்பிகை மற்றும் தண்டாயுதபாணி (ஓய்வு பெற்ற கிராம அலுவலர் - வட்டக்கச்சி), தர்மபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), தர்மாம்பிகை (லண்டன்), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் விமலச்சந்திரன், காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கேமதுசன், கிந்துசன், டர்மிகா, யுகான், தஷாங்கிதா ஆகியோரின் ஆசைமிகு அம்மம்மாவும் அட்ஷயன், சாத்வீகன், சுருதிகா, ஆருகா, ஆருகன் ஆகியோரின் ஆசைமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2026) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(2511)

123, பாண்டியன்தாழ்வு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
076 793 5809, 070 253 0417

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.